நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 149 /2025

## P.W. 5 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | பிரவின்குமார் |
| தந்தை / கணவர் பெயர் | : | பழனியப்பன் |
| கிராமம் | : | வீரக்கல் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW 5 |
| வயது | : | 25 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2025–ஆம் வருடம், நவம்பர் மாதம், 19–ம்ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் . அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.47PM

1. நான் தற்போது வீரக்கல்லில் குடியிருக்கிறேன். நான் மெக்கானிக்காக வேலை செய்கிறேன். சுமார் 1 வருடத்திற்கு முன்பு ஒரு பெண் பல்சர் வண்டியில் நங்கவள்ளியிலிருந்து மேட்டுர் நோக்கி வந்து கொண்டிருந்தார். அவருக்கு எதிரே மகேந்திரா பிக்கப்பை ஓட்டி வந்த நபர் இருசக்கர வாகனத்தின் மோதி

விபத்தை ஏற்படுத்தினார். போலீசார் என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். நான் கையெழுத்து செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். ( **பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. விபத்து நடந்த இடம் நங்கவள்ளி டு மேட்டூர் செல்லும் ரோட்டில் முனியப்பன் கோவில் அருகே மாண்டிபஸ் அவர்களின் தோப்புக்கு அருகே நடந்தாக சொன்னார்கள். நான் கையெழுத்து செய்த தாளில் விபத்து நடந்த இடத்தை சுற்றி விபத்து நடந்த இடங்களை சுற்றி குறித்து கொண்ட பிறகு தான் நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1. பார்வை மகஜரில் உள்ள கையொப்பத்தை நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் இருந்து 6,7 மாதத்திற்கு பிறகு தான் கையொப்பம் செய்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை. என்னிடம் எனது மெக்கானிக் கடையில் வைத்து வாங்கி கொண்டார்கள். நாச்சிமுத்து என்பவரை காவல் நிலையத்திற்கு வர சொல்லி அங்கு கையெழுத்து வாங்கினார்கள்.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–12.57PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா. கோபாலகிருஷ்ணன்**

**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**